ஓம்

# ஸ்ரீ கணேசனும் ஸ்ரீ கார்த்திகேயனும்

WITHDRAWN



உ

ஓம் கணபதி துணை

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. — ஸ்ரீவிநாயகர் துதி

N·A

உ

சிவமயம்

# ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

சீதக் கபளச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையி னினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயிலொரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்மமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிக்
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

---

உ

## விநாயகர் கவசம்

### அறுசீர்கழி நெடிலாசிரியர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு
    விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரதேகம்
    தோற்கடர் தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய

காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க
கவின் வளரும் அதரங்கச முகங்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசைசு தர்காங்க
நனிவாக்கை விநாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாச பாணி காக்க
தவிர்தலுறா திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைத் சிந்திதார்த்தர் காங்க
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களம் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன் காக்க
இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க
பக்கமிரண்டையுந் தரதரர் காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம்
வியாள பூடணர்தாங் காக்க
தக்க குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க சகனத்தையல்லல்
உக்க கணப்பன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தி யுவந்து காக்க
தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க
வாழ் கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க
அக்கினியிற் சித்தீசர் காக்க வுமா புத்திரர்தென்
னாசை காக்க
மிக்கநிருதியிற் கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்கநிதியன் காக்க
வடகிழக்கு லீசனந் தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின இருது காக்க
இராக்கதர்பூத முறுவே தாள

மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத வேக முறு
பிணிபலவும் விலங்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க
மதிஞானம் தவம் தான் மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க
வென்றி சீவி தங்கபிலர் காக்க
கரியாதி யெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ
திடினும்பா விடையூறென்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்.

விநாயகர் கவசம் முற்றிற்று.

ஓம்

## இறை இன்பம் தேடும் மனிதநேய உள்ளங்களுக்கு ........

நாம் அனைவரும் அமைதி இன்றித் தவிக்கிறோம். அன்பும் மனிதநேயமும் காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. நேர்மை திண்டாடுகிறது. ஒழுக்கம் ஊசலாடுகிறது ஏன்? வாழ்க்கையே இயந்திரமயமாகிவிட்டது. நாம் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கிறோமோ என ஒரு பயம் கூடவே இருக்கிறது. நாம் பெற்றுள்ள எதிர்காலச் செல்வங்கள் வளமுடன் வாழ வேண்டுமே? என்று ஏங்கும் மனித உள்ளங்கள் மலிந்து விட்டன. ஒரே வழி ஆன்மீக வழிபாடுதான் இறைஇன்பம் தேடும் மனிதநேய உள்ளங்கள் இங்குள்ள அமைதியின்மையைப் போக்கி அருளும்படி எல்லாம்வல்ல பரம் பொருளிடம் இறைஞ்சுங்கள் "கரைக்கக் கரைக்கக் கல்லும் கரையும்" என்பார்கள். கலியுகத்தில் இறைவன் நாமத்தை இடையறாது தியானித்தால் அப்பரம்பொருளின் கீதங்களை மனமொத்து இசைத்தால் எல்லாமே கைகூடும்.

நல்லதே நினைப்போம்
நல்லதே சொல்லுவோம்
நல்லதே செய்வோம்
நல்லதே நடக்கும்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம்! அரன் நாமமே
சூழ்க! வையகமும் துயர் தீரவே.

— திருஞானசம்பந்தர்

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே. — திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே — திருமந்திரம்

இறை சேவை செய்து, இறை இன்பத்தில் திளைத்து 'சச்சிதானந்தம்' எனும் அமுதக் கடலில் மூழ்கி எழும் அடியவர்களிடம் கோடிக்கணக்கான மனிதர்களுக்குச் கொடுக்கக்கூடிய அன்பு இருக்கிறது. அன்பு என்பது அமிர்தம் அழியாதது தினசரி வாழ்க்கையில் அன்பு செலுத்துங்கள் உண்மையான அன்பு சுயநலமில்லாதது ஆசாபா சங்களில் இருந்து விடுபட்டவன் பூரணமான அழியாத பக்தியைக் காண்கிறான்.

'ஆன்மீகம்" நிரம்பி வழியும் இந்திய தேசத்திலிருந்து இறைபற்றுள்ள படித்த பண்பாளர் ஒருவர் மேல் நாடு சென்றிருந்தார் அங்கு இந்து தர்மவிதிப்படி 'திருநீறு' நெற்றியில் இட்டுக்கொள்வது வழக்கமாகக் கொண்டிருந்தார். இவருடன் சினேகிதமான ஆங்கிலேயர் ஒருவர் "சாம்பலை ஏன் நெற்றியில் இட்டுக் கொள்கிறீர்கள்" என்று கேட்டார்.

இந்த உடம்பு நிரந்தரமானது அல்ல எங்கள் முறைப்படி இந்துசமயக் கொள்கை யின்படி இறந்தோரை அக்னிக்கு இரையாக்குவோம் 'ஒருபிடி சாம்பல்" தான் மிஞ்சும் என்றோ ஒரு நாள் ஒருபிடி சாம்பலாகும் இவ்வுலக வாழ்வை நினைவூட்டவே நித்த மும் நெற்றியில் நீறு பூசுகின்றோம்" என்று பதில் கூறினார்.

இந்துசமய தத்துவத்தின் பெருமையை அவர் வாயிலாக அறிந்த ஆங்கிலேயர் வியப்புக்குள்ளானார்.

அருமை பெருமைமிக்க இந்து சமயம் தர்மத்துக்கு வழிகாட்டும் ஒளி தீபம்.

ஆன்மீகப்பயிர் வளர்ப்போம்! ஆனந்தம் விளைய வைப்போம்! அணிதிரண்டு வாருங்கள்!

அன்றலர்ந்த மலர் சொரிந்து அடியார்க்கு இறை உணர்வூட்டி இறைசேவை செய்யும் அந்தணகுலத்தோர்க்கு இந்நூல் சமர்ப்பணமாகிறது. அடியேன் அவர்களின் திருப்பாதங்களின் அடி ஒற்றி இறை ஆசி வேண்டுகின்றேன்.

நன்றி; வணக்கம்;

ஓம்

# மஹா கணபதி யந்திரம்

## ஜப விதானம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே''

என்று கூறி, தலையில் இரண்டு கைகளினாலும் ஐந்துதடவை குட்டிக்கொள்ள வேண்டும். அல்லது,

"கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே
கவிம் கவீனாம் உபமச்ரவஸ்தமம்
ஜ்யேஷ்டராஜம் ப்ரம்ஹணாம் ப்ரம் ஹணஸ்பத
ஆன; ச்ருண்வன் ஊதிபி; ஸீத ஸாதனம்'

என்ற வேத மந்திரத்தைக் கூறிக் கொண்டு தலையில் இரு கரங்களாலும் ஐந்து தடவை குட்டிக் கொள்ள வேண்டும்.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீமஹா
கணபதி ப்ரஸாத ஸித்யர்த்தம் ஸ்ரீ மஹா கணபதி மஹா
மந்த்ர ஜபம் கரிஷ்யே.

அஸ்ய ஸ்ரீ மஹாகணபதி மஹாமந்த்ரஸ்ய கணக:
ரிஷி: ர்ருசத் காயத்ரீ சந்த: ஸ்ரீ மஹாகணபதிர் தேவதா
கம்பீஜம், ஸ்வாஹா சக்தி; ஓம் கீலகம் மம மஹாகணபதி
ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே வினியோக:

### கரநியாஸ

ஓம் ஓம் காம் — அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் ஸ்ரீம் கீம் — தர்ஜனீப்யாம் நம:
ஓம் ஹ்ரீம் கூம் — மத்யமாப்யாம் நம:
ஓம் க்லீம் கைம் — அனாமிகாப்யாம் நம;
ஓம் க்லௌம் கௌம் — கனிஷ்டிகாப் யாம் நம:
ஓம் கம் க: — கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:

### ஹ்ருதயாதி நியாஸ

ஓம் ஓம் காம் — ஹ்ருதயாய நம:
ஓம் ஸ்ரீம் கீம் — சிரஸே ஸ்வாஹா
ஓம் ஹ்ரீம் கூம் — சிகாயை வஷட்
ஓம் க்லீம் கைம் — கவசாய ஹும்
ஓம் க்லௌம் கௌம் — நெத்ரத்ரயாய வௌஷட்
ஓம் கம் க: — அஸ்த்ராய பட்
பூர்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த:

### தியானம்

பீஜாபூர — கதே — சஷு — கார்முக — ருஜா — சக்ரா — ப்ஜ — பாசோ — த்பல
ப்ரீஹ்யக்ர — ஸ்வவிஷாண — ரத்னகலச ப்ரோத் யற்கராம் போருஹ;
த்யோயோ வல்லபயா ஸபத்மகரயா சலிஷ்டோ ஜ்வலத் பூஷயா
விச்வோத்பத்தி விபத்தி ஸஸ்திதிகரோ விக்நேச: இஷ்டார்த்தத:

# ஸ்ரீ மஹா கணபதி யந்திரம்

டி.கே.முத்துஸ்வாமி சாஸ்த்ரிகள்



ओं श्रीं ह्रीं क्लीं ग्लौं गं गणपतये वर वरद सर्व जनं मे
वश मानय स्वाहा ॥

(உரை) உலகத்தின் சிருஷ்டி ஸம்ஹாரம் ரக்ஷணம் இவற்றைச் செய்பவரும் ஸகல விதமான இஷ்டங்களையும் அளிப்பவருமான ஸ்ரீ விக்னேச்வரரை (ஸ்ரீ மஹா கணபதியை) கொய்யாப்பழம், கதை, கரும்பு, வில், சூலம், சக்கரம், சங்கம், பாசம் நீலோத் பல புஷ்பம், நெற்கதிர், தன்தந்தம், கிவசம் இவை விளங்கும் பத்துக் கர கமலங்களும் துதிக்கையும் உடையவராகவும், இடது கரத்தில் தாமரை மலர் ஏந்தி ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ வல்லபா தேவியால் வலது கரத்தால் அணைத்துக் கொள்ளப்பட்டவருமாகவும் தியானம் செய்ய வேண்டும்.

(மஹா கணபதி வலது கரங்களில் சக்கரம் சூலம் கரும்புவில் கதை கொய்யாப் பழம் இவற்றையும் இடது கரங்களில் சங்கம் பாசம் நீலோத்பலம் (கருங்குவளைப்பூ) நெற்கதிர் தந்தம் இவற்றையும் துதிக்கையில் ரத்ன கலசத்தையும் தரித்துக் கொண்டிருப்பவராக தியானிக்க வேண்டும்.)

ஓம் லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி
ஓம் ஹம் ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி
ஓம் யம் வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி
ஓம் ரம் வஹ்ன்யாத்மனே தீபம் தர்பயாமி
ஓம் அம் அம்ருதாத்மனே அம்ருதோபஹாரம் ஸமர்ப்பயாமி
ஓம் ஸம் ஸர்வாத்மனே ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி

## மூலமந்த்ரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே
வர வரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா

மூல மந்திரத்தை 108, 1008 தடவை சௌகரியம் போல ஜபம் செய்யவும். மூல மந்த்ர ஜபம்முடிந்தபின் முன்கூறிய ஹ்ருதயாதி நியாஸத்தைச் செய்து 'பூர்வஸ்ஸுவரோ மிதி திக்விமோக' எனக்கூறி தியான சுலோகத்தையும் கூறி 'ஓம் லம்' என்ற லமித்யாதி பஞ்சபூஜையைச் செய்ய வேண்டும்.

## ஸமர்ப்பணம்

குஹ்யாதி குஹ்யாதி கோப்தா த்வம் க்ருஹாணாஸ்மத் க்ருதம்

## ஜபம்

ஸித்திர் பவதுமே தேவ த்வதிப் ரஸாதான் மயி ஸ்திரா

எனக் கூறி முடிக்க வேண்டும்

## மஹா கணபதி

இவர் வேதங்கள் புராணங்கள் இதிஹாசங்கள் ஆகமங்கள் மந்த்ர சாஸ்திரங்கள் இவற்றால் போற்றப்படும் மாபெரும் தெய்வம் கணம் என்றால் ஸமூஹம் என்று பொருள். ருத்ர கணம், ஆதித்ய கணம், வஸுகணம், அச்வினீகணம், விபுகணம், ஸாத்ய கணம், மருத்கணம், ஸித்த கணம் முதலான பல கணங்களுக்கும் இவர் அதிபதி. இவர் ஸர்வஞர்களுக்குள்ளே சிறந்தவர். ஆதலால் இவரை "கவிகளுக்கெல்லாம் கவி" எனப் போற்றுகின்றது வேதம். அனைத்து நற்குணங்களும் இவரிடம் சிறந்து காணப்படுவதால் இவர் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக (உபமானமாக) விளங்கும் பெருமை உடையவர். மஹா கணபதி காலக்கணக்கிற்கு அப்பாற்பட்டவர். மந்திரங்கள் ஏழு

கோடி மந்த்ரங்களும் ஓங்காரத்தினின்றும் எழுந்தவை. அந்த ஓங்கார ரூபியாகவும் அதன் பொருளாகவும் இருப்பவர் கணபதி. இந்த ஓங்காரத்துடன் வேதங்கள் இவர் மயூரேச கணபதியாய் இருந்தபோது இவர் மூச்சுக் காற்றால் உதித்தன.

"நிஸ்வாஸதோ பவன்னஸ்ய ஸோங்காரா; நிகமா; புரா" எனப் பேசுகின்றது கணபதி புராணம் "பிரணவப் பொருளாம் பெருந்தரை ஐங்கரன்" என இவரைப் போற்றுகின்றார் ஒளவையார். முப்பத்து முக்கோடி தெய்வங்களில் கணபதிக்கு ஒரு விசேஷத் தன்மையுண்டு. இந்த இந்தக் காரியம் வெற்றி பெற இந்த இந்த தெய்வங் களை வழிபட வேண்டும் என திட்டவட்டமாக அறிவித்துள்ளனர் பெரியோர். ஞானத்தை விரும்புபவர் மஹேச்வரனையும், மோக்ஷத்தை விரும்புவர் மஹாவிஷ்ணு வையும், ஆரோக்யத்தை விரும்புபவர் சூரியனையும், ஸௌபாக்யத்தை விரும்புபவர் பார்வதி தேவியையும், கல்யாணத்தை விரும்புபவர் இந்திராணி தேவியையும், பிரஜை களை (புத்திரப் பேறு) விரும்புபவர் முருகப்பெருமானையும் வழிபட்டால் ஸித்தி கிடைக்கும். ஆனால் இப்பலன்கள் அனைத்தையும் மஹாகணபதியை வழிபடுபவன் பெறுகின்றான் எனக் கூறுகின்றது ஹௌகா சக்ஷிஸ்ம்ருதி

பார்வத் யாஸ்சைவ ஸௌபாக்யம் சச்யா;
கல்யாண ஸந்ததிம்
ஸ்கந்தாத் ப்ரஜாபி விருத்திம் ச ஸர்வம்
சைவ கணாதிபாத்

என்று ஸ்காந்த புராணமும், அதன் ஒரு பகுதியான விநாயக மஹாத்மியமும் பார்வதபுராணம் முத்கல புராணமும் இவர் பெருமையை விஸ்தாரமாக வர்ணித் திருக்கின்றன.

## ஸ்வானந்த புவனம்

பிரும்மாவின் இருப்பிடம் ஸத்யலோகம் விஷ்ணுவின் வாஸஸ்தலம் வைகுண்டம் சிவநிலையம் கைலாஸம் அன்னை பராசக்தி அருளாட்சி புரியுமிடம் ஸ்ரீ நகரம் புவனேசி மகிழ்ந்துறையும் புண்யபூமி மனித்வீபம் அவ்வாறே பகவான் மஹாகணபதி அமர்ந்தருளும் இடம் ஸ்வானந்த புவனம் இவர் எங்கும் நிறைந்தவராயினும் ஸ்வானந்த புவனத்தில் வல்லபா தேவியுடன் அமர்ந்தருளுகின்றார். இந்த ஸ்வானந்த புவனம் பிரம்மஹணஸ் பதியான கணேசரால் மனத்தால் நிர்மானிக்கப்பட்டதாகும். ஆனந்தமே பட்டினமாய் காட்சியளிக்கின்றது இந்த ஸ்வானந்த புவனம் பத்தாயிரம் யோசனை பரப்புடையதாகும். கரும்புச்சார் கடலின் நடுவில் உள்ளது இந்த லோகம் இதன் பூமி, ஒரே ரத்னமயமாய் இருக்கும் இதில் பாரிஜாதம், ஸந்தானம், மந்தாரம் ஹரி, சந்தனம், கல்ப விருக்ஷம் முதலிய விருக்ஷங்கள் மண்டிக் கிடக்கும்.

இங்கு ஒரு கல்ப விருக்ஷத்தின் அடியில் நான்கு கால்களுடன் கூடிய நவரத்னமய மான ஒரு பீடத்தில் ஒரு ஸிம்ஹாஸனம். அதில் எட்டுக் கோணங்களின் நடுவில் உள்ள ஷட்கோணத்தில் அமைந்திருக்கும் த்ரிகோணம் ஜ்வலிக்கும் அவ்வாறான ஸிம்ஹாஸ னத்தில் தன் சக்தியான வல்லபா தேவியுடன் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் வழங்கு வார் மஹா கணபதி.

இவ்வாறான மஹாகணபதியின் அருளை நமக்கு அளித்தருளும் முன் கூறிய மஹா கணபதியின் மூல மந்த்ரம்.

இந்த மந்த்ரஜபம் இடையூறின்றிக் காரியஸித்தியை அளிப்பதுடன் அனைவரை யும் தனக்கு வசமாக்கும் சக்தியையும் படைத்ததாகும்.

(ஸர்வ ஜனம் மேவசமானய) அனைவரையும் எனக்கு வசமாக்கு என்பது மந்திரத்தின் பொருள் மஹாகணபதியை வழிபடுவோருக்கு கிடைக்காதது என்பதே இல்லை. எந்த மந்திரத்தை உபாஸித்தாலும் அதற்குமுன் மஹாகணபதியை வழிபட்டே தொடங்க வேண்டும் என்று மந்த்ர சாஸ்திரம் உறுதிபடக் கூறுகின்றது.

டி. கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்
நன்றி: கோபுரதரிசனம்

ஓம்

# கதிரொளியில் அவதரித்த கார்த்திகைபாலா

முருகப் பெருமானுடைய திருநாமங்களிலே ஸ்கந்தன் என்ற நாமம் உயர்ந்தது. கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவருடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கின்றவன் என்று பொருள்.

அந்த கந்தப்பெருமானைப் பற்றிச் சொல்லும் புராணம் 'கந்தபுராணம்' ஒரு லட்சம் கிரந்தங்களை உடையது. அதனை வடமொழியிலே வியாசபகவான் பாடி அருளினார். காஞ்சிபுரத்திலே குமரகோட்டத்து அச்சகர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தமிழிலே மொழிபெயர்த்தார்.

''சத்துரு கோஷ யதிதி ஸ்கந்தா...'' என்கிறது அமரகோச நிகண்டு.

மற்ற நூல்களிலே பகைவனைக் கொன்றதாக வரும். இரண்யனை நரசிம்ம சுவாமி கொன்றுவிட்டார். இராவணனை இராமர் கொன்றுவிட்டார். கம்சனை கண்ணபிரான் கொன்றுவிட்டார். கந்த புராணத்திலே சூரபத்மனை முருகப்பெருமான். கொல்லவில்லை அவனை சேவலும், மயிலுமாக ஆக்கிக்கொண்டார். அவன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றியெட்டு யுகங்கள் அரசு புரிந்தான். அத்தனை பேரும் அவனை அச்சத்தினால் வணங்கினார்கள். அவன் சேவலும் மயிலுமாக ஆன உடனே அண்டகோடிகள் எல்லாம் அவனை அன்பினாலே வணங்குகின்றனர். ஆகவே, சூரபத்மன் பெருவாழ்வு பெற்றான். பகைவனுடைய பராக்கிரமத்தை வற்றச் செய்தான் முருகன்.

சிவபெருமான் வேறு, உமாதேவியார் வேறு, விநாயகப்பெருமான் வேறு, முருகப் பெருமான் வேறு என்று சொல்லக்கூடாது. கடவுள் ஒன்றுதான்.

'ஏகம் ஏவாம் அத்ருதீம் பிரம்மம்' என்கிறது வேதம்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'- என்பது திருமூலர் திருவாக்கு.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்கிறார் பட்டினத்தார்.

நெருப்பு சிவபெருமான். நெருப்பில் இருக்கிற சூடு உமாதேவி. நெருப்பிலே உள்ள செம்மை நிறம் விநாயகர். நெருப்பின் ஒளி முருகப்பெருமான். நெருப்பு வேறு நெருப்பிலே இருக்கும் சூடு வேறு, செம்மை நிறம் வேறு. ஒளி வேறு அல்ல...

முருகவேள் திரு அவதாரம் என்றால், மேலேயிருந்து நமக்காக இறங்கிவருவது. அவதாரம் என்றால் இறங்கி வருவது. சூரபத்மனுடைய ஆட்சிக்கொடுமையைத் தாங்க மாட்டாத இந்திராதி தேவர்கள் சிவபெருமானைத் தொழுது, "உனக்குச் சமமான புதல்வனைக் கொடு!" என்று கேட்டார்கள். சிவனுக்கு சமானம் கிடையாது.

'சமானம் ரஹிதம் விபம்' என்று வேதம் சொல்கிறது.

ஆகவே, தேவர்கள் சிவபெருமானைப் பார்த்து, 'ஆண்டவனே! நீயே குழந்தையாய் வா' என்று நேர்முகமாகச் சொல்லாமல். 'உனக்குச் சமமான குமாரனைக் கொடு' என்றனர்.

முருகப் பெருமான் ஒருவன் தான் ஆண்பிள்ளை, அவனைத் தவிர உலகத்தி லுள்ள அத்தனை பேரும் பெண் பிள்ளைகள்!

ஆம், ஆண் வயிற்றில் பிறந்தால் ஆண்பிள்ளை, பெண் வயிற்றில் பிறந்தால் பெண்பிள்ளை. நாமெல்லாம் பெண்வயிற்றில் பிறந்தோம். பெண் பிள்ளைகள், அவன் ஒருத்தன் தான் ஆணிடமிருந்து வந்தான் ஆண்பிள்ளை.

சிவபெருமானுக்கு அனாதியானது ஆறுமுகம்.

ஆறுமுகங்கள்: ஈசானம், தத்புருஷம, அகோரம். வாமதேவம், ஸத்யோத்யாதம் அஜோமுகம், பரமேஸ்வரனுடைய ஒரு முகம்மேல்நோக்கி இருப்பது. அது ஈசானமுகம் கிழக்குநோக்கி இருப்பது தற்புருஷம. தெற்கே நோக்கி இருப்பது அகோரம். வடக்கே நோக்கி இருப்பது வாமதேவம், மேல்திசையை நோக்கி இருப்பது ஸத்யோத்யாதம். அப்படி கீழ்முகமாக இருப்பது அஜோமுகம், ஆறுமுகங்களோடு அந்த எம்பெருமான் காட்சியளிக்கிறார். தேவர்களுக்கு அஞ்சுதலை, சிவபெருமானுக்கு ஆறுதலை. அவனை வணங்கினால் நமக்கு ஆறுதலை கிடைக்கும். ஆறு திருமுகங்களிலே பகவான் ஆறு நெற்றிக்கண்களை திறந்து அருளினார். ஆறு அருட்பெருஞ் ஜோதிகள் தோன்றின.

அந்த ஆறு அருட்பெருஞ் ஜோதிகளைக் கண்டு உமாதேவியார் அஞ்சி ஓடினாள் அப்படி ஓடிய பொழுது அம்பிகையின் சிலம்பிலிருந்து ஒன்பது மணிகள் உதிர்ந்தன. அந்த ஒன்பது மணிகளில் உமாதேவியார் நிழல்பட்டு நவசக்திகள் பிறந்தன. அந்த ஒன்பது சக்திகளையும் சிவபெருமான் கடைக்கண்ணால் பார்த்து அருளினார். ஒன்பது பேரும் கருக்கொண்டார்கள் நீண்டநாள் கருச்சுமந்து அம்பிகையினுடைய அருளி னாலே நாபியிலிருந்து ஒன்பது வீரர்கள் (நவவீரர்கள்) பிறந்தார்கள்

வீரவாகுத் தேவர், வீரமகேந்திரர், வீரமகேசுரர் வீரதீரர், வீரராக்கதர், வீராந்தகர்... என்று நவவீரர்கள். 'தம்பியுடையான். படைக்கஞ்சான் என்பது பொருள். முருகப்பெருமானுக்கு ஒன்பது தம்பிகள், வியர்வையில் பிறந்தது லட்சவீரர்கள். லட்சத் தொன்பதாம் வீரர்களும் பரமேஸ்வரர் அருள்பெற்று வாழ்கி றார்கள்.

ஆண்டவன் அந்த ஆறு அருட்பெருஞ்ஜோதிகளை சுருக்கினான். விண்ணிலே இருந்ததை வாயுதேவன் அக்னி கையில் கொடுத்தான், அது நெருப்புக்கு நெருப்பாகச் சுட்டது.கங்கையிலே விட்டார்கள். கங்கை உருண்டுதிரண்டது. அது மண்ணுக்கு வந்தது.

சரம்னா தர்ப்பை: வனம்னா காடு. பொய்கை என்றால் தானே உண்டாவது. தடாகம் என்றால் மனிதன் செயற்கையாகச் செய்தது. 'சரவணப் பொய்கை' தர்ப்பை வனத்தின் குளம் என்று அர்த்தம் தர்ப்பைக்கு மின்சாரத்தை இழுக்கிற ஆற்றல் உண்டு. அந்த ஆறு அருட்பெருஞ் ஜோதிகளையும் இந்த தர்ப்பை இழுத் தது. அங்கே ஆயிரத்தெட்டு இதழ் தாமரைக்கமலம். அதுதான் இதயக் கமலம்.

அந்தத் தாமரைக் கமலத்திலே முருகப்பெருமான்.

"அருவமும் உருவும் ஆகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்.
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய'!'

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட முருகப் பெருமான் என்றைக்கும் உள்ளவர். பிறந்தார் என்று இல்லை. உதித்தனன். 'சூரியன் உதித்தான்' என் பதினாலே, சூரியன் இன்று தான் பிறந்தான் என்ற அர்த்தம்? என்றைக்கும் உள்ளவன். அப்படி என்றைக்கும் உள்ளவன் முருகன். ஆண்டவன் அருவமாய் இருப்பார்.

பொய்கையில் தவழ்ந்த ஆறு குழந்தைளையும் அம்பிகை எடுத்தாள். அது ஒன்றுபட்டது. "கந்தன்" என்ற வார்த்தைக்கு, "ஒன்றுபட்டவன்' என்பது இன்னொரு பொருள். அந்த தேவி சிவஞானப்பாலை தங்கக் கிண்ணத்திலே கலந்து கொடுத்தாள்

சிவபெருமான் சத்து, முருகப்பெருமான் சித்து. ஆனந்தம். அம்பாள். சத்து சித்து ஆனந்தம். அந்த சிவஞானப்பாலை உண்டு சச்சிதானந்தமாக முருகப்பெரு மான் 'கைலாச' மலையில் வீற்றிருக்கிறான்.

எம்பெருமானுக்குப் பலப்பல நாமங்கள் முருகன் என்ற சொல்லுக்கு அழகன் என்று பொருள். குமரன் என்ற சொல்லுக்கு உலக சம்பவத்தையெல்லாம் அருள் புரிகின்றவன். சரவணபவன், சரவணத்திலே தோன்றியவன், விசாகம் என்றால் சிறந்த மயிலை வாகனமாக உடையவன். சாகம்- சிறகு விசாகம். சிறந்த சிறகினை யுடைய மயில், ஆறுமுகங்களாக இருக்கிறான் ஷண்முகன். அந்த ஆறுமுகம் ஆறு வகையான கருணை செய்கிறது...

ஒருமுகம் பிரணவ மயிலேறி விளையாடுகிறது
ஒரு முகம் பரமனுக்கு சிவஞானம் போதிக்கிறது.
ஒரு முகம் முருகாவென மொழிகின்ற அடியார்தம் வினை தீர்க்கிறது
ஒரு முகம் அஞ்ஞானம் மெனும் மலையைப் பிளக்கிறது.
ஒரு முகம் ஆணவமலமான சூரபத்மனை ஆட்கொள்கிறது.
ஒரு முகம் வள்ளியம்மைக்குக் கருணை புரிகிறது.

முருகனுக்கு மொத்தம் மூன்று வாகனங்கள். ஆட்டுக்கடா வாகனம், யானை வாகனம், மயில் வாகனம் ஆணவமலம் யானை, மாயைமலம், ஆடு.

ஒருமுறை நாரத முனிவர் வேள்வி செய்தார். அந்தமந்திரத்திலே உச்சரிப்பு கொஞ்சம் மாறுபட்டது. அதனால் வைரம் போன்ற கொம்பையுடைய ஆட்டுக்கடா ஒன்று தோன்றியது. உலகத்தையே இம்சை செய்தது அந்த கார் என்ற ஆடு,

தேவர்கள் சென்று முருகனிடம் முறையிட்டனர். முருகனின் கட்டளையை ஏற்று வீரவாகு அதனை அடக்கிக் கொண்டு வந்தார். அந்த ஆட்டை தனக்கு வாகன மாக்கிக் கொண்டார்.

'ஓம் அஜாருடைய நமஹ :'

சூரபத்மனுடைய தம்பியான தாரகாசூரன் மேல் பகவான் ஞானசக்திவேலை ஏவ, அந்த வேல் கிரவுஞ்ச மலையைத் துளைத்து உடைத்து, தாரகாசூரனைக் கொன்று விட்டது. தாரகாசூரன் மாண்டு போகவில்லை! ஐயனாருக்கு யானை வாகனமாகப் போய்விட்டான்

கந்தபுராணமாகிய முதல்வன் புராணத்திலே சூரபத்மன் அழிந்து போகவில்லை. பெருவாழ்வு பெறுகிறான். ஜலதாரைத் தண்ணீர் கடலிலே விழுந்தால் அது கடல் நீராக மாறிவிடும் எத்தனை எத்தனை தீமைகள் செய்திருந்தாலும் ஞானக்கடலா கிய முருகப்பெருமானை அடைந்தால் அவர்கள் வாழ்வு பெறுவர்.

மேலே சேவல், கீழே மயில், மயில் வந்து இருளைக் கண்டு மகிழும், சேவல் ஒளியைக் கண்டு மகிழும். இருளுக்கும் ஒளிக்கும் மத்தியிலே முருகன் இருக்கிறான்.

தெய்வயானை என்பது கிரியா சக்தி, வள்ளி என்பது இச்சாசக்தி முருகன் கையில் வேலாயுதம் ஞானசக்தி. முருகப்பெருமானை நிஷ்காமியாக வழிபடுகின்ற வர்களுக்கு வாழ்க்கை என்றைக்கும் மலர்ந்திருக்கும். கந்தவேளை எந்த வேளையும் வணங்கி அவரை வாழ்த்தி, சிந்தித்து, அவருள்பெற வேண்டும்.

"ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்கூடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க!
மாறுஇலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்."

நன்றி: ஞானபூமி.

ஓம் கணபதி துணை

# குரு அருளும் .... திரு அருளும்....

## குரு காயத்ரீ

ஓம் குருதேவாய வித்மஹே, பரப்ரஹ்மணே தீமஹி!
தன்னோ குரு ப்ரசோதயாத்!!

ஓம் நமது குருதேவரை அறிந்து கொள்வோமாக அந்த பரப்பிரமம்மாகிய குரு வைத் தியானம் செய்வோமாக. அந்தக் குருவே நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

குருவருள் இல்லாமல் திருவருள் இல்லை. கயிலை மலைச்சாரலில் கல்லால மரத்தின் கீழே சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் இறைவன் ஆதிசிவன் மெய்ப் பொருளின் உண்மைத் தத்துவத்தை உபதேசிக்கத் திருவுள்ளம் கொண்டார். கல்லால் மரத்தின் கீழே ஒருகாலை மடித்து மற்றொரு காலைக் கீழே தொங்கவிட்ட நிலையில் அமர்ந்து வலக்கரத்தால் சின் முத்திரை காட்டி உண்மை நிலை உணர்த்தினார்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West

''தெற்கே செல்லும் மரணயாத்திரை மேற்கொள்ளாமல் சரண யாத்திரையாக வடக்குத் திசையில் வாருங்கள்'' என்று உணர்த்துவதற்காகவே தென் திசையில் அமர்ந்தார். தட்சிண (தெற்கு) திசையை நோக்கி அமர்ந்ததால் 'தட்சிணாமூர்த்தி' என்று சிவபெருமானின் இந்தத் திருவுருவம் அழைக்கப்படுகிறது. சின் முத்திரையின் மூலம் இறைவன் வழங்கிய உபதேசத்தால் சனகாதியர் உள்ளத் தெளிவு பெற்றார்கள். பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் வயதில் சிறியவர்களாகவும், ஆசிரியர்கள் வயதில் மூத்தவர்களாகவும் இருப்பது வழக்கம். இங்கு அதற்கு மாறாக தட்சிணாமூர்த்தி இளமையழகுடன் வீற்றிருக்கிறார். அவரது மாணவர்களாகிய சனகாதி முனிவர்கள். பல்லாயிரம் ஆண்டுகள் முதிர்ந்த, வயோதிபர்கள், இறைவனோ அவர்களிடம் எதுவும் பேசவில்லை.

தனது அருள் மயமான ஆழ்ந்த மௌனத்தின் மூலமாகவே அவர் மாணவர்களின் சந்தேகங்கள் அனைத்தும் நீங்கும்படி செய்தார். அப்படி தட்சிணாமூர்த்தி என்ன தான் உணர்த்தினார்.

அவர்காட்டிய சின் முத்திரை என்ற அடையாளம் வலக்கரத்தில் மூன்று விரல்கள் (சுண்டு, மோதிர, நடு விரல்கள்) மேலே உயர்த்தி நிற்கும் நிலையில் காணப்படும். ஆள்காட்டிவிரல் கட்டைவிரலின் (பெருவிரலின்) அடியுடன் இணைந்து நிற்கும், இறைவன் 'பதி' எனப்படுவான், உயிர்கள் அனைத்தும் பசுக்கள் எனப்படும். பசுக் களாகிய உயிர்களுக்கு இயல்பாகவே மும்மலங்கள் உண்டு. அவை ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மூன்று குற்றங்களாகும். இந்த மூன்று குற்றங்களிலிருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை அடைய வேண்டுமென்பதுதான் உண்மையான என்றுமுள்ள தத்துவம், இறைவன் உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம் மாயை என்பவற்றைக் குறிக்கிறது. பெருவிரல் பதியாகிய இறைவனையும், ஆள்காட்டி விரல் பதியை அடையும் பசுக்களையும் குறிக்கும். கட்டை விரலின் துணை இல்லாமல் எந்த ஒரு பொருளையும் எடுக்கவும் இயலாது எழுதவும் இயலாது. ஆகவே பெருவிரல் இறைவனைக் குறிப்பிடுகிறது. இறைவன் அருளில்லாமல் இந்த உலகில் எதுவும் இயலாது என்ற கருத்தும் இதனால் உணர்த்தப்பட்டது. ஒரு விதத்தில் முப்புரிநூல் என்ற பூணூலும் சின் முத்திரையின் தத்துவத்தை உணர்த்தும் சின்னமாகும்.

எட்டுச்சாண் நீளத்துடன் மூன்று புரிகளாக ஒரு முடிச்சுடன் பூணூல் உருவாக் கப்படுகிறது. எண் சாண் உடம்பில் மும் மலங்கள் இருக்கின்றன. அவை நீங்கும் வரையில் பிறவி என்ற முடிச்சு உண்டு என்பதைப் பூணூல் குறிப்பிடுகிறது. வேர் ஊன்றி வளர்ந்து விரிந்துபடர்ந்த ஆலமரத்தின் கிளைகளில் இருந்து மீண்டும் விழுதுக ளாகிய வேர்கள் கீழே இறங்கிப் பூமியில் சேருகின்றன. அதுபோலவே இறைவனிட மிருந்து பிரிந்து தோன்றி வளர்ந்த உயிர்கள் மீண்டும் அவனிடமே ஒடுங்குகின்றன' என்ற சிருஷ்டிகிரம உண்மையை உணர்த்தவே ஈசன் ஆலமரநிழலில் அமர்ந்தார். தட்சிணா மூர்த்தி கோலத்தின் இறைவனில் அம்பிகை அடங்கி இருப்பாள். இறைவன் யோகமூர்த்தியாக இருக்கும் போது யோகேஸ்வரியான அம்பிகையின் திருவுருவத்தைத் தன்னுள் தியானம் செய்கிறார். வீணை மீட்டிய கோலத்தில் இருக்கும் தட்சிணா மூர்த்தியை ''வீணா தட்சிணாமூர்த்தி என்பார்கள்.' இவரே வீணையை முதலில் உருவாக்கி இசைத்து பிறகு தனது சகோதரியாகிய சரஸ்வதியிடம் அந்த வீணையை அளித்துவிட்டார். என்பது மரபு.

'தியான மூலம் குரோர் மூர்த்தி:
பூஜா மூலம் குரோ பதம்
மந்திர மூலம் குரோர் வாக்யம்,
முக்தி மூலம் குரோ க்ருபா'



Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

இதன் பொருள்; தியானத்துக்குக் குருவின் மூர்த்தம், பூஜைக்குக் குருவின் பாதம் மந்திர உபதேசத்துக்குக் குருவின் வாக்கியம், முக்தியைத் தருவது குருவின் கிருபா கடாட்சம்.

"குருவே சர்வ லோகாணாம்
பீஷஜே பவ ரோகினாம்
நித்ய ஸர்வ வித்யானாம்

இதன் பொருள்! உலகுக்கெல்லாம் குருவாகவும், வியாதியையும் தீர்த்து வைப்பவரும். வித்யைகளையும் தந்து அனுக்ரஹிப்ப வருமான தட்சிணாமூர்த்தியே உம்மை நமஸ்கரிக்கிறேன்.

தட்சிணாமூர்த்தியைத் தமிழில் 'தென்முகக்கடவுள்' என்றும் 'அறமுரைத்தபட்டர்' என்றும் 'ஆலமரச் செல்வர்' என்றும் குறிப்பிடுவார்கள். தட்சிணாமூர்த்தியை வழிபடுவோர்க்கு கோள்களால் விளையும் கேடுகள் நீங்கும்.

**கணேச காயத்ரீ**

ஓம் ஏகதந்தாய் வித்மஹே, வக்ரதுண்டாய தீமஹி!
தன்னோ தந்தி ப்ரசோதயாத்!!

ஓம் ஒற்றைக் கொம்பை உடைய கணபதியை அறிந்து கொள்வோமாக. வளைந்த துதிக்கை கொண்ட கணபதியைத் தியானம் செய்வோமாக. தந்தம் படைத்த அவரே நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக.

**ஷண்முக காயத்ரீ**

ஓம் ஷண்முகாய வித்மஹே மஹா சேனாய தீமஹி!
தன்னோ ஸ்கந்த ப்ரசோதயாத்!!

ஓம் அந்த சண்முகனை அறிந்து கொள்வோமாக. (தேவர்களின்) மகாசேனாதிபதியாகிய அவரைத் தியானம் செய்வோமாக. அந்த ஸ்கந்த பகவான் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவராக.

குருவே சிவன், குருவே தெய்வம், குருவே பந்து, குருவே ஆத்மா, குருவே உயிர், குருவிற்குப் புறம்பாக எதுவுமில்லை!

சுபம்!
நன்றி!
வணக்கம்!

இறைபணியில்

வளாக ஒழுங்கை
திருநெல்வேலி
சொந்த இடம்; புங்குடுதீவு-5

திருமதி. சி. சிவபாதசுந்தரம்

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## திருப்பரங்குன்றுரை தீரன்
## முதலாவது கவசம்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே
வையாச புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடைய முதல்வன் மதலாய் நமோ நமோ

விராலி மலையுறை விமலா நமோ நமோ
மாமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம் கார துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியிடைக் கோவே நமோ நமோ
ஆழ்சூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ஓம் ரீம்

வவவ வவவ வாம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூழ்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்

சக சக் சக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக

வருக வருக நிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்மணித் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனதுடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க! மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா

நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவகதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிகரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்

செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துக்கள் ஆடிய சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே!
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணியுடனே வரையுமாக் கலைகளும்

தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்

எண்ணிலாத்தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லால்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்

சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே!
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

உ
சிவமயம்

# கந்தர் சஷ்டி கவசம்

## இரண்டாவது கவசம்

## நூல்

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைகணமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடிவை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாபிக் கமலம் நல்வேல் காக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக லன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தனெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்துஉகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## பழநிப் பதியொளிர் பரமன்

## மூன்றாவது கவசம்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபர ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்

வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்ட நிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா

ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனை கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்த(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்

சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில் வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம

எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை
சர்வ முக்கோணந் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி

மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்த்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்

முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன் மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்காய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்

சிந்தையுள் ஏற்றிச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி

மனத்தில் பிரியா வங்கணமாக
நினைத்த படி என் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறுமுகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்தவுடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
இலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துற் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியாக்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென

வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக் (கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்

துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரீ நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங் (கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருற
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாத்தானே எரித்துச்

சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்

அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத்துடன் என் மனத்துள் இருந்து

தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடனம் மேவுமுச் சாடணம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தன் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்

சரணம் சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்கார
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## திருவேரகத்துறை பெருமான்

## நான்காவது கவசம்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே

நானெனும் ஆணவம் நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
"ஏகாட் சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
"துவியட் சரத்தால்" தொல்லுல(கு) எல்லாம்
அதிசயமாக அமைத்தவர போற்றி

"திரியட் சரத்தால்" சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற்றவனே
"சதுரட் சரத்தால்" சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
"பஞ்சாட் சரத்தால்" பரமன் உருவாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்

ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆ யுதத்தால்
தரங்குலைந்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா

துட்டசம் கார சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொள்ளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக

தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்

தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்

சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை, சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குன் வலிப்பு
திட்டு முறைகள் செய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை

செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரணம் பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

ஓம்

# கந்தர் கஷ்டி கவசம்

## குன்றுதோறாடும் குமரவேள்

## ஐந்தாவது கவசம்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
புள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா

பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறுமுகவா
சண்முக நதியும் சார்பன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா

ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீறணி திருநுதல் அழகும்

கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைப்போல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநாயகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க

மறுக்கம் சூர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துத்
கார்த்திகேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்

கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள் சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக

மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுரா பவவெனும் தேவே வருக
பரிபுர பவவெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்தோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்

தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீ தாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமணி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்

நாபிக் கமலம் நவரோ மபந்தியும்
மார்பில்சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயரகத் தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்

நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
அணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்

அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிலைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்

அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க

சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்ன
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன் நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க

தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந்தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவிடாமல் உன் ஏவலர் போற்றச்

சிவனடியார்கள் திருப்பாத மேத்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்

எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து
விட்டவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்

திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவேரகமும்
துய்ய பழநி சுப்பிர மனியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை

கண்ணிய மாவூந்து கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கொடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்தினிலும் பக்தர் மனத்திலும்

எங்கும் தானவ னாயிருந்(து) அடியார்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க.
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்டமுடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிகமாய் எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரணம் பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

ஓம்

## கந்தர் சஷ்டி கவசம்

### பழமுதிர் சோலை கதிரேசன்

### ஆறாவது கவசம்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்

திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே

தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வுமாய் பழமுதிர்சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே

குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்யதவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பதுன்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிரதாயா சண்முக வேலா

நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப்படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்க வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து

அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டி தனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
ஆறுமுகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்களோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை

வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனாதிபதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)

இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்கு குரு தேசிகனே
தேன்பொழி பழநித் தேவா குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகேயா என்
கஷ்டநிஷ்டுரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என் முன்னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்

தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான் செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

( ஆறு கவசங்களும் முற்றுப் பெற்றன )

ஓம்

# முதல் மூவர்

இருளில் தடுமாறாமல் இருக்க ஒளிதேவை. செல்கிற பாதையில் வழிதடுமாறாமல் இருக்க வழிகாட்டி தேவை. இறைவனை நாம் அடைய, ஆன்மா தவறாமல் இருக்க குருநாதர் தேவை.

சனாதன தர்ம மதமாகிய இந்து மதத்தில். குருநாதர்களாக அமைந்து அருளியவர் மூவர். இறைவனைப் பற்றியும் இறையருளைப் பெறவும் இம்மூவரும் தத்தம் வழியில் நமக்கு உபதேசம் செய்தார்கள்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அத்வைதத்தையும், ஸ்ரீ இராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தையும், ஸ்ரீ மத்வாச்சார்யார் துவைதத்தையும் நமக்கு உபதேசித்தனர்.

பாரதத்தின் தென் பகுதியில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களிலேயே இம்மூன்று ஆச்சாரியர்களின் அவதாரத்தலங்கள் அமைந்தது நாம் செய்த பாக்கியம்.

"கடவுள் எப்படிப்பட்டவர்! நான் ஒருதூசி! அவர் எங்கே, நான் எங்கே?"

இப்படி எண்ணுவதே த்வைத மனப்பான்மை.

"அவன் துணை இருக்கும்போது பயமேன்? அவன் நிச்சயம் என்னைக் காப்பான்! அவனிடம் சரணாகதி அடைந்தால் போதும்"

என்று எண்ணும்போது நாம் விசிஷ்டாத்வைதிகளாகிறோம்.

எல்லாத் தெய்வங்களும் ஒன்றே எல்லா உயிர்களிலும் அவன் இருக்கிறான்.

எனும்போது அத்வைதமாகிறோம். முதல் இரண்டு பக்திக்கு முக்கியத்துவம் உள்ளவை. கடைசியில் கூறப்பட்ட அத்வைதம் ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது மூன்றுமே நமக்கு அவசியம்தான்.

ஸ்ரீ ஆதிசங்கரர் கேரளதேசத்தில் 'காலடி' எனும் கிராமத்தில் பரமேஷ்வரனின் அம்சமாக அவதரித்தார். இளமையிலேயே சங்கரரின் தந்தை சிவகுரு இறைவன் திருவடியை அடைந்தார், அன்னை ஆர்யாம்பிகை உரிய காலத்தில் அவருக்கு உபநயனம் செய்வித்து வேதாப்பியாசத்திற்கு அனுப்பி வைத்தார். சங்கரர் வேத வேதாந்தங்களை எட்டு வயதிற்குள் கற்றுத் தேர்ந்தார். குருகுலவாசம் முடிந்ததும் தான் உலகிற்கு ஆற்ற வேண்டிய பணிகளுக்காக உலக பந்தங்களிலிருந்து விடுபடத் தீர்மானித்தார்.

ஒருநாள், நதியில் சங்கரர் நீராடும்போது முதலை அவருடைய பிஞ்சுக் காலைப் பற்றியது. இச்செய்தி அறிந்ததும் ஆர்யாம்பாள் ஓடிவந்தாள், முதலையினிடத்தில் பிள்ளை சிக்கி இருப்பதைப் பார்த்தாள்.

சங்கரர் பதறாமல், "அன்னையே. உலக பந்தங்களிலிருந்து எனக்கு விடுதலை தாருங்கள். அப்படி விடுபட்டால் இந்த முதலை என் காலை விட்டுவிடும்" என்றார். தாய்ப்பாசம் ஆர்யாம்பாளை சம்மதம் சொல்ல வைத்தது. சங்கரர் அன்னையின் அனுமதியோடு துறவறம் சென்றார்,

நர்மதை நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தார் கோவிந்த பகவத்பாதர். இம்மகானையே தன் குருவாகக் கொள்ள சங்கரர் தேடிவந்தார். கோவிந்த பகவத்பாதர் "நீ யார் எனக்கேட்டார். ஞானப்பிள்ளையான சங்கரர் அக்கேள்விக்கு விடையாக பத்து சுலோகங்களைக் கூறினார். இதுவே நிர்வாண சதகம்.

"நான் இந்த உடம்பல்லன். இதிலுள்ள எதுவுமல்லன் நான் அகண்ட சச்சிதானந்த அந்தப் பரப்பிரம்மமே" என்பதே அவருடைய பதிலின் சாரம் மகிழ்ச்சியுடன் சங்கரரைச் சீடனாக ஏற்று முறைப்படி சந்நியாசம் வழங்கி உபதேசம் செய்தார் கோவிந்த பகவத்பாதா.

நர்மதையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது கரையில் இருந்து தங்கள் ஆசிரமங்கள் நீரில் அடித்துச் செல்லப் போவதை அறிந்த தவமுனிவர்கள் பதறினர். வெள்ளப் பெருக்கைப் பார்த்தார். தன் கமண்டலத்தை நீரின் குறுக்கே வைத்தார் சங்கரர். வெள்ள நீர் முழுவதும் அதனுள் புகுந்து அடங்கியது. ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் இதைப்பார்த்து மகிழ்ந்தார்.

"சங்கரா! இத்தகைய ஆற்றல் பெற்றவனால் மட்டுமே வேதாந்த சூத்திரத்திற்கு பாஷ்யம் செய்ய முடியும் என வியாசர் என்னிடம் கூறியுள்ளார். அதனால் நீயே அத்வைத சித்தாந்தத்தை விளக்கவேண்டும்" என பெரும் பொறுப்பை ஒப்படைத்தார்.

தன் குருநாதரின் வார்த்தைகளை ஏற்று காசிக்குச்சென்றார் சங்கரர் அங்கு அத்வைத தத்துவங்களையும் உபநிஷத்துக்களையும் போதித்தார். பகவத்கீதை, பிரம்ம சூத்ரம், உபநிஷதங்கள் போன்றவற்றிற்கு உரை எழுதினார்.

ஒருமுறை தன் சீடர்களுடன் வந்து கொண்டிருந்தார் சங்கரர். அப்போது எதிரில் புலையன் ஒருவன் ஒரு கையில் கோலும் தோளில் கள் குடுவையும், நான்கு நாய்களைக் கயிற்றில் கட்டிப்பிடித்தபடியும் வந்து கொண்டிருந்தான். அவன் தொலைவில் வரும்போதே துர்நாற்றம் வீசியது. சங்கரரை உராய்வதுபோல அவன் வந்தான்.

சங்கரர் "அன்பனே, சற்று விலகிச் செல்!" என்றார் அவன் உடல்மீது பட்டால் தூய்மை கெட்டுவிடும் என அவர் எண்ணினார். புலயன் சங்கரரைப் பார்த்துச் சிரித்தான்

"உடல்கள் யாவும் எலும்பு ஊன், இரத்தம் இவற்றால் உருவான பிண்டங்கள் தானே? இவற்றுள் ஒன்றினால் மற்றொன்று எப்படித் தூய்மை கெடும்? சூரிய ஒளி கங்கைநீரிலும், சேரிக்குட்டையிலும் விழுகிறது. இந்த ஒளியில் எந்த வித்தியாசமும் இல்லை. இப்படியிருக்க அந்தணன், புலையன் என வேறுபாடு பாராட்டலாமா?"

சங்கரர் அவன் கூறியவற்றின் உட்பொருளை உணர்ந்தார். அவருக்குத் தெளிவு பிறந்தது. அப்புலையனின் காலடியில் விழுந்து வணங்கி தன் குருவாக ஏற்றார். (புலையனாக சிவபெருமானே வந்ததாக வேறு வரலாறு உண்டு) 'மனீஷா பஞ்சகம்' ஐந்து சுலோகங்களைக் கூறினார்.

மாகிஷ்மதி என்ற ஊரில் மண்டமிஸ்ரர் என்ற பண்டிதர் இருந்தார். அவருடைய மனைவியாக சரசவாணி பெயரில் கலைமகளே இருந்தார் இல்லற தர்மமே சிறந்தது என வாதிட்ட மண்டன மிஸ்ரரையும் சரசவாணியையும் சங்கரர் வாதிட்டு வென்றார். மண்டலனமிஸ்ரர் இல்லறத்தை துறந்து துறவுபூண்டார். சுரேஸ்வரர் என்ற பெயருடன் சங்கரரின் சீடரானார். நான் 'சாரதா பீடம் அமைக்கும்போது அதில் அமர்ந்து அருளவேண்டும்' என சங்கரர் சரசவாணியை வேண்டித் துதித்து சம்மதம் பெற்றார்

பத்ரிகாசிரம் சென்று அங்கு ஓர் குகையில் இருந்த தன் குரு கோவிந்தபாதரையும் பரமகுரு கௌடபாதரையும் சங்கரர் வணங்கினார். தன் பாஷ்யங்களுக்கு

அவர்களுடைய அங்கீகாரம் பெற்றார் அவர்கள் ஆசியுடன் கயிலாயம் சென்று
பரமேஸ்வரனைத் துதித்தார்

அவருடைய பத்தியை மெச்சிய கயிலைநாதன் ஐந்து ஸ்படிக லிங்கங்களைத்
தந்தான். யோக, மோக்ஷ, முக்தி, யோக லிங்கங்களைப் பெற்ற சங்கரர் மகிழ்ந்
தார்.

யோகலிங்கத்தைத் தன் ஆத்ம பூஜைக்கு வைத்துக்கொண்டு மற்றவைகளை
முறையே சிதம்பரம், பத்ரிகாசிரமம், நேபாளம், நீலகண்ட க்ஷேத்திரம், சிருங்கேரி
ஆகிய இடங்களில் சங்கரர் ஸ்தாபிதம் செய்தார்.

சங்கரர் பாத தேசம் முழுவதும் திக்விஜம் செய்து அத்வைத கொள்கைகளைப்
பரப்பினார். தவறான மதவழிகளைக் கண்டித்ததோடு, வழிபாட்டு முறைகளைச்
சீர் செய்து ஷண்மத மார்க்கங்களை வழிபடுத்திக் கொடுத்தார்.

காணபத்தியம், கௌமாரம், சைவம், வைஷ்ணவம், சாக்தம், சௌரவம் என்பதே
சங்கரர் கண்ட ஆறு சமயமாகும் இதற்கான ஆறு மூர்த்திகளையும் துதிக்க ஏராளமான
சுலோகங்களையும் அருளினார்.

அத்வைத போதனைகளை நீண்ட பரந்த பாரதத்தின் எல்லாப்பகுதிகளிலும்
செய்ததோடு வேதநெறி பரப்பவும், அத்வைத பிரசாரத்தைத் தொடரவும் மடங்
களைத் ஸ்தாபித்த சங்கரர் தன் முப்பத்திரெண்டாவது வயதில் மனித உடலைத்
துறந்து பரம்பொருளோடு ஐக்கியமானார்.

ஓம்

# ஸ்ரீ இராமானுஜர்

ஸ்ரீ பெரும்புதூர் தந்த பெருமான் இவர் வெறும் ஆச்சாரிய புருஷன் மட்டுமல்ல
புரட்சியாளர் சமூக சிந்தனையாளர், பகுத்தறிவுச் சாதனையாளர். சாதிபேதமற்ற
சமுதாயத்தைப் படைக்க பாடுபட்டவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்ந்து
காட்டிய அற்புதர்.

தாழ்த்தப்பட்ட குலத்தில் தோன்றிய திருக்கச்சிநம்பிகளை மதித்து வணங்கித்தம்
குருவாக ஏற்ற ஸ்ரீ இராமானுஜர் உறங்காவில்லிதாசன் போன்ற தாழ்த்தப்பட்ட
பிரிவினரையும் தம் சீடர்களாகப் பெற்றவர்

பெரும் மதசமுதாயப் புரட்சிகளையெல்லாம் தனிமனிதனாக நிறைவேறியவர்.
வைதீகம் உச்சமாக இருந்த அந்நாளில் திருவரங்கப் பெருமாளுக்கு துலுக்க நாச்சி
யாரைத் திருமணம் புரிவித்து, பீபி நாச்சியார் ஆக்கி உற்சவங்களை அமர்க்களமாக
நடத்திக் காட்டினார்.

திருநாராயணபுரத்தில் ஹ ஜனங்களை 'திருக்குலத்தார்' என்று பெயரிட்டு அவர்
களை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். இந்த ஆலயப் பிரவேதசம் ஆயிரம்
ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது. ஸ்ரீ இராமானுஜரின் இதயம் விசாலமானது
கருணையை அடிப்படையாகக் கொண்ட அவரது மதம் இணையில்லாமல் உயர்ந்து
நிற்கிறது,

'விசிஷ்டாத்வைத 'எனும் தத்துவத்தை அளித்த ஸ்ரீ இராமானுஜர். கேசவ
சோமாஜிக்கும் காந்திமதி என்ற பிராட்டியாருக்கு திருமகனாய் அனந்தனுடைய
அம்சமாய் ஸ்ரீ இராமானுஜர் தோன்றினார்.

ஸ்ரீ இராமானுஜர் தன் தகப்பனாரிடமே வேதங்களைப் பயின்றார். பதினாறாவது வயதில் இல்லறதர்மம் ஏற்ற ஸ்ரீ இராமானுஜர் தன் தந்தையை இழந்தார்.

காஞ்சிக்சருகில் திருப்புட்குழியில் யாதவப்ராசர் என்ற ஏகதண்டி சந்நியாசி இருந்தார். இராமானுஜர் இவரை நாடிச் சென்று பாடம் கேட்டார். ஒரு முறை உபநிஷத வாக்கியத்திற்குத் தவறாகப் பொருள் சொன்னயாதவப்ரகாசரை மறுத்து சரியான பொருளை இராமானுஜர் கூறினார். யாதவப்ரகாசர் சினந்து இராமானுஜரை விரட்டி விட்டார். தன்னை அவமதித்து விட்டதாகக் கருதிய ப்ரகாசர் இராமானுஜரை உலகத்திலிருந்து ஒழித்து விடவும் எண்ணினார். காசியாத்திரைக்குக் கிளம்பிய ப்ரகாசர் அன்புடன் பேசி இராமானுஜரையும் தம் கூட்டத்தோடு அழைத்துச் சென்றார். "கங்கையில் மூழ்கடித்துக் கொன்று விட வேண்டும்" என்பதே அவருடைய எண்ணம்.

விந்திய மலைச் சாரலை நெருங்கி அனைவரும் தங்கினர், ப்ரகாசரின் தீய எண்ணம் இராமானுஜருக்குத் தெரியவந்தது அங்கிருந்து கிளம்பிவிட்டார். காட்டுப்பகுதி நல்ல இருட்டு இராமானுஜருக்குப் பாதை தெரியவில்லை. ஒரு வேட்டுவத் தம்பதி அப்போது வலிய வந்து உதவினார்கள். பொழுது புலர்ந்தபோது தாம் காஞ்சி நகர எல்லையில் இருப்பதையும், தம்மை வழிநடத்தி வந்தவர்களைக் காணமலும் இராமானுஜர் திகைத்தார் வரதராஜப் பெருமாளே தம்மைக் காப்பாற்றி இருக்கிறார் என்ற உண்மை அவருக்குப் புரிந்தது. தாயாரிடம் நடந்தவைகளைக் கூற, அவள் திருக்கச்சி நம்பிகளைப் பற்றிக் கூறினார். சபரியின் அம்சமான திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாளோடு நேரிலேயே பேசுவார் நீ எதைச் செய்தாலும் அவரைக் கேட்டுச் செய் என்ற தாயின் வாக்குப்படி நம்பிகளைச் சந்தித்தார்.

திருக்கச்சி நம்பிகள் இராமானுஜரை திருமஞ்சன கைங்கர்யத்தில் ஈடுபடும்படி கூறினார். பெருமாளே வந்து வழிகாட்டிய செய்தியும், இராமானுஜரின் பெருமையும் எல்லா இடங்களிலும் பரவியது.

திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த ஆளவந்தார் காஞ்சிக்கு வந்தார். இராமானுஜரைப் பார்த்து பூரித்தார். தனக்குப் பிறகு அந்த இடத்தில் இராமானுஜரே இருக்க வேண்டும் என எண்ணியவர் "இதை நடத்தித் தரும்படி" பெருமானிடம் விண்ணப்பித்து ஸ்ரீரங்கம் திரும்பினார்.

திருக்கச்சி நம்பிகளைத் தனக்குக் குருவாக வரிக்க முயன்றார். இராமானுஜர் "தாழ்ந்த குலத்தவன் தான்" என்கிற சிந்தனையில் நம்பிகள் மறுத்து விட்டார். நம்பிகள் உண்ட மீதத்தைத் தான் உண்டு குரு சிஷ்ய பாவத்தை ஏற்படுத்திக்கொள்ள இராமானுஜர் முயன்றார். ஆனால் நம்பிகளின் சமார்த்தியத்தாலும் இராமானுஜரின் மனைவியின் ஆசார மமதையாலும் அதிலும் தோல்வியே கிட்டியது.

சரியான குருவிடம் உபதேசம் பெற இயலாத நிலை இராமானுஜரைக் கலங்கச் செய்தது முடிவெடுத்தார் தன்நிலைக்கு ஒவ்வாத மனைவியை அவளுடைய பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டார். ஆலயத்திற்குச் சென்றார். ஆலயத்தில் திருக்கச்சி நம்பிகளும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் நிரம்பி இருந்தனர். இறைவனின் முன் நின்று "அடியேனுக்கு சந்நியாச ஆசிரமம் அருள வேண்டும்" எனக் கண்ணீர் மல்க வேண்டினார். 'இராமானுஜரே நீர் உள்ள அளவும் திரிகண்ட காஷாயாதிகளைத் தரிக்கக் கடவீர். இன்றுமுதல் இராமானுஜமுனி என்கிற திருநாமம் உமக்கு விளங்கட்டும். எனத் திருவாய் மலர்ந்த பெருமாள் திருக்கச்சி நம்பி! நம் இராமானுஜரை நல்லதொரு மடத்திலே வைத்து வாரும்" என ஆணையிட்டார்.

ஸ்ரீ இராமானுஜர் மடம் துரிதமாக விரிவடைந்தது. முதலியாண்டான் கூரத்தாழ்வான் போன்ற மாணிக்கங்கள் மடத்தில் சேர்ந்தனர். தன் தவறுகளை எண்ணி வருந்தியதோடு இராமானுஜரின் பெருமைகளை ஏற்ற யாதவப்ரகாசர் இராமானுஜரிடம் வந்தார். அவரை வலம் வந்து வணங்கினார். இராமானுஜர் அவருக்கு திரிகண்ட காஷாயம் அளித்து 'கோவிந்தஜீயர்' என்ற பட்டமும் கொடுத்தார். குரு இராமானுஜரின் உத்தரவுப்படி கோவிந்தஜீயர் யதி தர்ம ஸ்முக்யம்' என்கிற நூலை இயற்றினார்.

ஆளவந்தாரின் மறைவுக்குப் பிறகு தற்காலிகப் பொறுப்பேற்றிருக்கும் ஸ்ரீரங்கம் அரையர் காஞ்சிக்கு வந்தார். பெருமாளிடம் உத்தரவு வாங்கி இராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்துச் சென்றார். திருவரங்கமே திரண்டு நின்று இராமானுஜரை வரவேற்கிறது. வீதி வலம் வந்து ஆலயத்திற்குள் வந்த இராமானுஜரை, "இனி அனைவரும் உம்மை உடையவர் எனக் கொண்டாடுவர்" என அரங்கன் அருளினான் உடையவர் ஆலய நிர்வாகத்தை ஏற்று பல சீர்திருத்தங்களைச் செய்பலானார்.

ஸ்ரீ வைணவத்தின் சாரங்களை அறிய திருக்கோஷ்டியூர் நம்பிகளை உடையவர் நாடினார். பதினெட்டு முறை விடாமல் சென்றும் நம்பிபிடி கொடுக்கவில்லை. கடைசியில் பெருமாளே நம்பிக்கு "தண்டும் பவித்திரமும் தாங்கிக் கொண்டு தனியாக வரவும்" என இராமானுஜருக்குச் சொல்லியனுப்பினார். செய்தியைக் கேட்டு மகிழ்ந்த இராமானுஜர் முதலியாண்டானையும், கூரத்தாழ்வானையும் அழைத்துக் கொண்டு திருக்கோஷ்டியூர் சென்றார். "தனியாக வல்லவா வரச் சொன்னேன்" என்று நம்பிகள் கேட்டதுக்கு தாங்கள் கூறியபடியே வந்திருக்கிறேன். இவர்கள் இருவருமே என்னுடைய தண்டும் பவித்திரமும் ஆவார்கள்" எனக் கூறி உடையவர் வணங்கினார்.

நம்பிகள் "சரி அப்படியானால் உங்களைத் தவிர வேறு யாருக்கும் நான் உபதேசிப்பதைச் சொல்லக்கூடாது. மீறினால் நரகம் கிட்டும்', எனக் கூறி அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். இதைக் கேட்டதும் உள்ளம் பூரித்த உடையவர் உடனே மனம் வருந்தினார். "இப்பெரும் மந்திரத்தை அறியாமல் எத்தனை பேர் வாழ்வு வீணாகியது' என்பதை எண்ணி எண்ணி வேதனையுற்றார்.

திருக்கோஷ்டியூரில் இருந்த அனைவரையும் அவ்வூரில் இருந்த சௌம்யநாராயணன் ஆலயத்தில் கூடும்படி செய்தார். ஆலய கோபுரத்தின்மேல் ஏறி உரக்க மகாமந்திரத்தைக் கூறி அதை அனைவரும் சொல்லும்படி சொன்னார். அனைவரும் ஒரே குரலில் சொல்ல உடையவர் பூரித்தார்.

செய்தியறிந்த நம்பிகள் உடனே இராமானுஜரை வரவழைத்தார், அவர் செய்தற்கு விளக்கம் கேட்டார். சினத்தோடு வினவிய நம்பிகளைப் பணிந்து, தேவரீர்! தங்கள் கட்டளையை மீறியதற்கு மன்னியுங்கள் இதன் மூலம், எனக்கு நரகம் கிட்டும், நான் ஒருவன் நரகம் சென்றாலும் இம் மந்திரத்தைக் கூறிய அனைவரும் பரமபதம் பெறுவார்கள் அல்லவா?' எனக் கூறினார். இதைக் கேட்ட நம்பி பேசும்திறன் இழந்தார். 'இப்படிப்பட்ட விசால மனம் நமக்கில்லையே' என வெட்கினார். உடையவரை மார்புறத் தழுவிக் கொண்டு 'கருணையின் முழுவடிவமான நீரே அந்த பரந்தாமன், நீரே எம் பெருமானார் என்றான்.

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தை பிரபலப்படுத்திய உடையவரின் புகழ் திக்கெட்டும் பரவியது. பல நூல்களை உடையவர் அருளினார். வட நாட்டில் இருந்த மகாபண்டிதரான யக்ஞமூர்த்தி என்பவர் ஸ்ரீ ரங்கம் வந்தார். உடையவரோடு வாதிட்டு, முடிவில் தான் தோற்றதாக உடையவர் திருவடிகளைப் பற்றினார்.

அவருக்கு 'எம்பெருமான் என்ற பெயர் சூட்டினார் உடையவர்.

ஒருசமயம் திருக்கோஷ்டியுடன் உடையவர் திருமலை நோக்கிப் புறப்பட்டார்.
அவருடைய வேகத்திற்கு மற்றவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. இடையில் வழி
தெரியாது போகவே உடையவர் அங்கே கிணற்றில் ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்
தவனிடம் வழி கேட்டார். அவன் காட்டினான். அதற்குள் கோஷ்டியாரும் அங்கே
வந்து விட்டார்கள்.

ஏற்றம் இறைத்தவனை நோக்கி தரையில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து
உடையவர் வணங்கினார். மற்றவர்கள் வியந்து நோக்க, பக்தி சாதிக்கு அப்பாற்
பட்டது. இப்பரம பாகவதன் திருமலைக்குச் செல்லும் பாதையைக் காட்டியிருக்கிறான்
மோட்சத்திற்கு வழிகாட்டுபவன் திருமலையான் அவனை அணுக இந்த பாகவதன்
வழிகாட்டியிருக்கிறான். பகவானுக்கு வழிகாட்டுபவன் ஆச்சாரியனாகிறான்" என்று
வைஷ்ணவ சமத்துவத்தை இராமானுஜர் உபதேசித்தார். பல திருத்தலங்களுக்கு
எழுந்தருளி மங்களசாசனம் செய்வித்து, பல திருப்பணிகளை நடத்தி பல நூல்களை
அருளி, பல சீடர்களைப் பக்குவப்படுத்தி, வைணவநெறி பரப்பி, ஜாதி வித்யாசங்களை
நம் செயலாலும், சொல்லாலும் போக்கடித்து, புரட்சிகளைச் செய்து, பல அற்புதங்
களை நிகழ்த்திக்காட்டி சமயப் போக்கில் கருணையையும் பரந்த நோக்கத்தையும்
அடிப்படையாக்கி நிலை நிறுத்திய இராமானுஜர் தம் பணிகள் முடித்த நிலையில்
பூவுலகத்தைத் துறக்க முடிவெடுத்தார்.

சிறிதுசிறிதாக உடல் நிலையில் தளர்ச்சி ஏற்பட்டது. தம்முடைய சத்தியனைத்
தையும் ஸ்ரீ பெரும் புதூரில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரத்துள் புகுத்திவிட்டு,
எம்பாரின் மடியிலே தலை வைத்து, வருக நம்பியின் மடியிலே திருவடிகளை நீட்டி
மந்திரத்தை உச்சரித்தபடியே உடையவர் திருநாடு ஏகினார்.

ஓம்

## ஸ்ரீமத்வர்

வாயுதேவனின் அவதாரம். உடுப்பியை அடுத்த யாஜக கோத்திரத்தில்
தோன்றினார். மத்யஹேகர், வேதவதி தம்பதிகளுக்கு புத்திரனாகத் தோன்றிய
இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் வாசுதேவன்.

வாசுதேவன் குழந்தைப் பிராயத்தில் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம்.
கடன்காரன் மடியில் புளியங்கொட்டைகளைப் போட்டதும் அவை நாணயங்களாக
மாறியதும், குழந்தைப் பிராயத்தில் நின்றுகொண்டு ஒருவரின் பிரசங்கத்தில் செய்த
தவறை எடுத்துச் சொல்லி திருத்தியதும், என பல. குருகுலவாசத்தின் போது
விளையாட்டிலேயே ஈடுபட்டிருந்த பாலகனை குரு கண்டிக்க, அன்றுவரை நடந்த
பாடங்களையும். இனிநடத்தப்போகும் பாடங்களையும் சொல்லக்கேட்டு குரு
வியப்பில் மூழ்கினார்.

குருகுலவாசம் முடிந்ததும் வாசுதேவனின் உள்ளம் துறவறத்தை நாடியது.
அச்சுதப்ரோஷர் என்ற துறவி வந்தபோது தன் ஆவலைத் தந்தையிடம் கூறி
அனுமதி கேட்க, "நீ துறவு ஏற்றால் வயதான காலத்தில் எங்களை ஆதரிப்பவர்
யார்?" எனக் கேட்டார் தந்தை.

"இன்றைக்கு 314 வது நாள் கழித்து மறுதினம் சிம்ம லக்னத்தில் உங்களுக்கு மற்றொரு மகன் பிறப்பான். அதுவரை நான் துறவு ஏற்கமாட்டேன்" என வாசுதேவன் வாக்களித்தான். சொன்னபடியே பிறந்தது. சொன்னபடியே பெற்றோரிடம் அனுமதிபெற்று வெளியேறிய வாசுதேவன் அனந்தேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் இருந்த அச்சுதப்ரோஷரை வணங்கி சன்யாச தீட்சை பெற்றார். 'பூர்ணப்ரக்ஞர்' என்பது இவருடைய தீட்சா நாமம். பின்னாட்களில் இவருக்கு ஆனந்த தீர்த்தர் மத்வர் என்ற பெயர்கள் ஏற்பட்டன.

துறவு ஏற்ற 41-ம் நாள் கங்கையில் நீராட வேண்டும் என்பது மத்வரின் சங்கல்பம். குறுகிய காலத்தில் செல்லமுடியாது என்பதால் இறைவனைத் துதித்தார். இறையருளால் உடுப்பியிலுள்ள தடாகத்திலேயே கங்கை வந்துவிட்டாள். மத்வர் சங்கல்பப்படி நீராடி முடித்தார். அன்றுமுதல் அத்தடாகம் 'மத்வ ஸரோவரம்' எனப் பெயர் பெற்றது.

அச்சுதப்ரோஷர் அத்வைதம் பயின்றவர். அதையே சீடர்களுக்கும் போதித்தார். இது மத்வரின் மனதைக் கவரவில்லை. குருவின் ஆசியுடன் பகவத்கீதைக்கும் உபநிஷதங்களுக்கும் தம் வழியில் அழகாகப் பொருள்கூறி அனைவரையும் வியக்க வைத்தார். பின் குருவின் உத்தரவோடு யாத்திரை கிளம்பினார். பலரையும் வாதில் வென்றார். இவரது தர்க்க வாதத்தைக்கேட்டு ஒரு அத்வைதி 'அநுமான தீர்த்தர்' என சிறப்புப் பெயரளித்தார்.

ஒரு சமயம் சந்திர நதிக்கரையில் ஐத்ரேய உபநிஷதவியாக்யானம் செய்தார் மத்வர். "வேத வார்த்தை ஒவ்வொன்றுக்கும் மூன்று பொருள்கள் உண்டு. மகா வாக்கியங்களுக்கு பத்துப் பொருள் உண்டு. விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் ஒவ்வொரு நாமாவிற்கும் நூறு பொருள் உண்டு" என அவர் கூறிய போது பண்டிதர்கள் மறுத்தனர். ஒரு நாமாவை எடுத்துக் கொண்டு வியாகரண சாஸ்திரம், வேதம் இவைகளை மேற்கோள்காட்டி இவர் பொருள் சொல்லிக்கொண்டேபோக பண்டிதர்கள் பணிந்தனர்.

ஒளிவிடும் சுடராய் விளங்கிய மத்வர் துவைத சித்தாந்தக் கொள்கைகளை அமைத்து பகவத்கீதை பாஷ்யத்தைப் பூர்த்தி செய்தார்.

வியாச பகவானின் ஆசிபெற இமாலயம் சென்றார். வியாசரை தரிசித்து சூத்ரபாஷ்யங்கள் செய்வதற்கான உபதேசங்களைப் பெற்றார். பத்ரிகாசிரமத்திலிருந்து மத்வர் உடுப்பி திரும்பினார். அத்வைதத்தைப் போதித்துக்கொண்டிருந்த அச்சுதப் பேராயரிடம் வாதிட்டு அவரிடம் துவைதத்தை ஏற்கும்படி கூறினார். அவரும் அதனை ஏற்றார்.

கோபி சந்தனக் கட்டியுள் புதைத்திருந்த கிருஷ்ண விக்கிரகத்தை எடுத்து உடுப்பியில் பிரதிஷ்டை செய்தார். தான் தோற்றுவித்த சித்தாந்தமும், கிருஷ்ணன் ஆலய பூஜைகளும் உலகுள்ள அளவும் நீடித்திருக்க பல மடங்களையும் நிறுவினார்.

உடுப்பி அஷ்ட மடங்களும் ஸ்ரீபத்நாப தீர்த்தர் தலைமையில் ஒரு மடமும் மத்வரின் புனித கைங்கர்யங்களை மேற்கொண்டன. இம்மடாதிபதிகளுக்கு மத்வரே சந்நியாச தீக்ஷை அளித்தார்.

ஏராளமான நூல்களை இயற்றி தீவிர பக்தி மார்க்கத்தை உபதேசம் செய்து தம் அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்தார். தன் சிஷ்யர்களின் நடுவே ஐத்ரேய உபநிஷத்தை மத்வர் விளக்கிக்கொண்டிருந்த போது மலர்மாரி பொழிந்தது. மத்வர் மனித சரீரத்தை விடுத்து திவ்ய மங்கள நிலை எய்தினார்.

ஸ்ரீமத்வரின் ஆத்மாவின் ஒரு பாகம் அனந்தேஸ்வரர் ஆலயத்திலும், ஒரு பாகம் உடுப்பி கிருஷ்ணன் ஆலய சிம்மாசனத்திலும், ஒரு பாகம் பரியாய சுவாமிகளிடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

எல்லார்வி பார்த்திபன்

நன்றி : ஆன்மீகம்

ஓம்

# அத்வைத பஞ்சரத்னம்

(ஜீவனும், பிரம்மமும் வெவ்வேறான இரண்டல்ல என்பதை ஆதிசங்கரர் ரத்தினம் போன்ற இந்த ஐந்து சுலோகங்களில் கூறுகிறார்.)

1) நான் உடல் அல்ல. இந்திரியங்கள் அல்ல. மனம் அல்ல. அகங்காரம் அல்ல. (நான்) மனைவி, பிள்ளை, இருப்பிடம், பணம் முதலியவைகளிலிருந்து வெகு தூரத்தில் இருப்பவன். (இவைகளுடன் எனக்கு கொஞ்சமும் சம்பந்தம் கிடையாது) நான ஸாக்ஷி (மாத்திரமாக இருப்பவன்) என்றுமுள்ளவன் உள்விளங்கும் ஆத்மவஸ்து சிவம்.

அனைத்தையும் அறியும் போதிலும், அந்த அனைத்தில் எதனாலும் பாதிப்படையாததால் ஆத்மாவானது ஸாக்ஷி எனப்படும். அமைதி, அன்பு, நன்மை, மங்களம், அத்வைதம் ஆகியன சிவம் எனப்படும்.

2) இது கயிறு என்று தெரிந்து கொள்ளாததால் எவ்வாறு கயிற்றில் பாம்பு தோன்றுகிறதோ (ஒருவன் கயிற்றைப் பாம்பாக நினைத்து விடுகிறானோ அதுபோலவே) தன் ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளாததால் தனது ஜீவத்தன்மை (ஏற்படுத்திக் கொள்கிறான்) நண்பனின், வார்த்தையால் (அதாவது யாரேனும் அன்பர் அது கயிறு என்று கூறுவதால்) பாம்பு என்ற பிரமை நீங்கிய உடனே, அது கயிறாகத் தோன்றுகிறது. (அதுபோல்) குருவின் உபதேசத்தால் நான் ஜீவன் அல்ல நான்சிவம் (என்று தெரிந்து கொண்டேன்)

3) தூக்கம் என்ற மயக்கத்தால் (ஸ்வப்னம்) கனவு (தோன்றுவது) போல, சச்சிதானந்தஸ்வரூபமான ஆத்மாவில் அக்ஞானத்தால், பொய்யான இந்தப் பிரபஞ்சம் தோன்றுகிறது அது உண்மையல்ல. நான் பரிசுத்தமானதும் பூர்ணமானதும், அழிவற்றதும், ஒன்றானதுமான சிவம்.

4) நான் பிறப்பு எடுத்த ஒருவன் (ஒரு ஜீவன்) அல்ல வளர்பவன் அல்ல அழிபவன் அல்ல. பிரக்ருதி (மாயை) யால் ஏற்பட்ட எல்லா தர்மங்களும் தேகத்தினுடையவை (யே ஆத்மாவுடையவை அல்ல என்று சொல்லப்பட்டிருக்கின்றன) கர்த்ருத்வம் முதலியன அகங்காரத்தினுடையவை தானேயன்றி, ஞானஸ்வரூபமான ஆத்மாவாக இருக்கும் எனக்கு இல்லை நான் சிவம்.

5) இங்கு என்னைக் காட்டிலும் வேறான உண்மையாகப் பிரபஞ்சம் ஒன்றும் இல்லை. மாயையால் ஏற்பட்டுள்ள வெளிப் பொருள், அத்வைதமான என்னிடம் கண்ணாடிக்குள் தோன்றும் பொருளுக்கு சமமாக விளங்குகிறது ஆகையால் நான் சிவம்.

நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

# விநாயகர்



வேண்டுபவர்கள் வேண்டியதை அருளும் வீறுடைய நாயகன், 'ஓம்' எனும் பிரணவத்தைத் தம் திருவுருவமாகக் கொண்டவர், தேவ கணங்களுக்கு எல்லாம் தலைவரான கணபதியாவார்.

வீடுகள், கோயில்களில் விநாயகரின் அமர்ந்த வடிவமே ஏற்றது. உற்சவருக்கு அமர்ந்த கோலம் இருக்கலாம். இருப்பினும் நின்றகோலமே சிறப்பாகும்.

விநாயகப் பெருமான் கடவுள், மனிதர், தேவர், விலங்கு முதலிய எல்லா உயிர்களுக்கும் அருள் புரிபவர். எனவேதான் அதை உணர்த்தும் வகையில் அவர் தம் திருவுருவத்தில் இடைக்குக் கீழ் மனிதக்கூறும், இடைக்கு மேல் கழுத்துவரை தேவக்கூறும், அதற்குமேல் விலங்குக் கூறும் அமைந்து காணப்படுகிறார்.

'அறிவிலும் பண்பிலும் உயர்வுபெற்றால் விலங்குகளும் உயர்வாக மதிக்கப்படும்; அவற்றில் தாழ்ந்தால் தேவரும் மனிதரும் கூட இழிந்தவர்களாகக் கருதப்படுவார்கள்' என்னும் தத்துவத்தையே விநாயகரின் திருவுருவ அமைப்பு நமக்கு உணர்த்துகிறது.

''யானைமுகனைக் காண்பவன் எல்லா தேவர்களின் முகத்தையும் காண்பவன் ஆகிறான். யானை முகத்தவரான இந்தக் கணபதி மகிழ்ந்தால் மூவுலகிலுள்ள எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்கள்'' என்று புஷ்பதந்தர் அருளிய கணேச மஹிம்ன ஸ்தோத்திரம் கூறுகிறது.

ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீ சதாசிவம் போன்ற தெய்வங்களின் ஸ்வரூபத்தையே தமது உடலாகக் கொண்டவர் கணேசர்.

''எப்போதும் பிரம்ம ரூபமாய, மாறுபாடுகளற்று, மாறுபாடுகளுக்கு அதிகாரணமாய், மகேசரால் வணங்கப் பெற்ற, அபரஸ்வரூபமான, தனக்குள்ளே அறியத்தக்கவராக இருப்பவர் வக்ரதுண்ட விநாயகர், சூரியன், உயிரான காற்று, விஷ்ணு, வருணன், யமன், பிரம்மா, அக்கினி, இந்திரன், திக்தேவதைகள் ஆகியவர்களுக்கு ஒளியைக் கொடுத்து எல்லா தேவர்களுமாக விளங்குபவர் வக்ரதுண்ட விநாயகர்'' என்று வக்ரதுண்டர் ஸ்தோத்திரம் குறிப்பிடுகிறது.

விநாயகர் காலைமடித்து அமர்ந்தகோலம் அகரம்; தலையும் துதிக்கையும் உகரம்; வயிறு மகரம்; விந்து, நாதம். ஆகிய இரண்டும் விநாயகரின் உருவத்தில் விளையாடுகின்றன. குண்டலினி ஊர்தி, பாசம் அறுபத்து பாச ஆங்குசம். தந்தம் பதி (இறைவனைப் பற்றிய) அறிவை விளக்கும். ஏழு உலகங்களும் கொழுக்கட்டை மந்திர சாதனை ஜபமாலை, நான்கு திருக்கரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு

அளிக்கும் அறிகுறி முக்கண்களில் நடுக்கண் ஞானக்கண் மற்ற இரண்டு கண்கள் சூரிய, சந்திரர்கள், இதில் இடக்கண் அகாரம், வலக்கண், உகாரம் நெற்றிக் கண் மகாரம் என்று பெரியோர் கூறுவர்.

## புராணங்கள் போற்றும் பெருமான்

உபநிடதங்கள் விநாயகரைப் பரம்பொருளாக வர்ணிக்கின்றன.

ரிக் வேதத்தில் உள்ள 'ப்ரஹ்மணஸ்பதி சூக்தசங்கள்' கணபதியை விவரித்துக் கூறும் மணிவாக்குகளாகும். அவை, ''பிரமன், திருமால் ருத்திரன், ஈஸ்வரன், சதா சிவம் என்ற ஐந்து தேவவடிவம் கொண்ட பஞ்சகிருத்தியம் எனும் ஐந்து தொழில் களைப் புரிபவர் விநாயகர்'' என்று குறிப்பிடுகின்றன.

பிரம்ம வைவர்த்தம், ஸ்காந்தம், பத்ம புராணம், கணேச புராணம், முத்கல புராணம், மானவக்ருஹ்ய சூத்திரம், யாக்ஞவல்கியம் ஸ்மருதி முதலியவற்றில் விநாய கரின் வழிபாடு கூறப்பட்டுள்ளது.

பிரம்மாண்ட புராணத்தில் விநாயகரின் வரலாறு விரிவாகக் காணப்படுகிறது.

தனக்கு உணவு கொடுத்து அன்பு செலுத்தும் பாகன் தன் காலில் அடியினை எடுத்து வைத்தால் அவனை தன் முடி மீது உயர்த்துவது அந்தப் பாகனுக்கு இடுக்கண் வராமல் காப்பது – யானையின் குணமாகும்.

## விநாயகரின் பெருச்சாளி வாகனம்

எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் (தாங்குபவராவும், தாங்கப் படுபவராகவும்) விநாயகர் இருக்கிறார் என்பதை அவரது பெருச்சாளி வாகனம் காட்டுகிறது.

பெருச்சாளி இருளை விரும்பும்; கீழறுத்துச் சென்று கேடு விளைவிக்கும். அதனால் அது அறியாமை அல்லது ஆணவ மலத்தைக் குறிக்கும்.

எனவே பெருச்சாளியைப் பிள்ளையார் தமது காலின் கீழ் கொண்டிருப்பது அவர் அறியாமையையும், செருக்கையும் அடக்கி ஆட்கொள்பவர் என்பதை உணர்த்துகிறது.

## ஐங்கரன்

பெருமானின் ஐந்து திருக்கரங்களும் திருவைந்தெழுத்தை உணர்த்துவதாகும்.

அங்குசம் தாங்கிய வலக்கை சிகரம், பாசம் பற்றிய இடக்கை வகரம், தந்தம் ஏந்திய வலக்கை யகரம், மோதகம் உள்ள இடக்கை நகரம், துதிக்கை மகரம். இப் படியாக 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தை விநாயகரின் ஐந்து திருக்கரங் களும் உணர்த்துகின்றன.

## ஐம்பெரும் சக்தி

விநாயகப் பெருமான் பஞ்ச பூதங்களையும் தம்முள் அடக்கி முழு முதல்வனாகக் காட்சி தருகிறார். அவரது மடித்து வைத்துள்ள ஒரு பாதம் பூமியையும், சரிந்த தொந்தி நீரையும், அவரது மார்பு நெருப்பையும், இரண்டு புருவங்களும் சேர்ந்த அரைவட்டம் காற்றையும், அதன் நடுவில் வளைந்திருக்கும் கோடு ஆகாயத்தையும் உணர்த்தும்.

பெருமான் தம் திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் ஐந்தொழிலை உணர்த்துகின்றன. அவரது பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒடிந்த தந்தம் காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறிப்பிடுகின்றன.

மனித உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம் ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன, இவைகளில் முதல் ஆதாரமாகிய மூலாதாரத்தில் உறைபவர் முதல்வரான விநாயகர்.

**பரப்பிரம்மம் விநாயகர் :**

விநாயகரின் சிரஸ் பிரம்மம் ஆகும். உச்சந்தலை பரமேஸ்வரராகவும், எண் திசைகள் காதாகவும், அக்கினி, சூரியன், சந்திரன் முக்கண்களாகவும், பிரம்மாண்டமே இவரது கழுத்து (ருத்திரன் கழுத்து என்றும் கூறுவர்.) புண்ணியம் இவர் மேல் உதடு பாவம் இவரது கீழ் உதடு, சாம வேதம் இவரது ஒலி. சூரியன் முதலிய கிரகங்களும் கிருத்திகை முதலிய நட்சத்திரங்களும் பற்கள், வேதங்கள் புராணங்கள் நியாய மீமாம்சை நூல்கள் முதலிய தெய்விகச் சொற்களஞ்சியங்கள் (சரஸ்வதி) நாக்காகவும், இந்திரனை மூக்காகவும், யானை உடலின் கழுத்துக்கு மேல் உயர்ந்து பருமனாக உள்ள இரண்டு மாமிசப் பிண்டங்கள் (கண்டிகை) சூரிய சந்திரர்களாகவும், லட்சுமி அவரது திருமார்பாகவும், உள்ளம் வேதமாகவும், பரந்து விரிந்த வெளியான ஆகாயம், அவரது தொப்புளாகவும், கடல்களைப் பெரும் வயிறாகவும், யட்சர், கந்தர்வர், அரக்கர், கின்னரர், மனிதர்கள் ஆகியவர்களை வயிற்றின் உள்ளே நாடி நரம்பாகவும் உடையவர் விநாயகர்.

கங்கை முதலிய நதிகளையும், சோணம் முதலிய நிதங்களை (நிதம்-மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு) கைகளாகவும், ஆதிசேஷன் முதலிய சர்ப்பராஜாக்களை விரல்களாகவும் துருவன் முதலிய நட்சத்திரங்களைக் கை கால்களின் விரல்களாகவும் விநாயகர் கொண்டிருக்கிறார்.

மேருமலையை முதுகாகவும், மண்ணுலகத்தைத் தம் இடையாகவும், உயிரினங்களைத் தமது குறியிலும், மலைகளைத் துடைகளாகவும் அச்வினிதேவரை முழந்தாள்களாகவும், மண்ணுலகின் கீழ் உள்ள பாதாளத்தைக் கணுக்காலாகவும் பாதாளத்தில் தவம் செய்யும் முனிவர்களை உள்ளங்கால்களாகவும், காலனைக் கட்டை விரல்களாகவும், மூன்று வேதங்களை உடலனைத்துமாகவும் கொண்டவர் விநாயகர் துருவன் முதலிய நட்சத்திரங்கள் அடங்கிய ஜோதி மண்டலத்தை வாலாக அமைத்துக் கொண்டவர்; அடியவரின் உள்ளத்தைக் கட்டுத்தறியாகக் கொண்டு அசையாமல் வீற்றிருப்பவர்; அடியவரின் உள்ளம் என்ற தாமரையின் உள்ளே இருக்கும் தஹராகாசத்தைத் தாம் குளித்துக் களித்து விளையாடும் குளமாகக் கொண்டவர் விநாயகர்.

ஆர். கோமதிநாயகம்

நன்றி : ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

# விநாயக தத்துவம்

'ஏகதந்தன்' என்றும், 'விக்னேஸ்வரன்' என்றும், 'கணேசன்' என்றும் போற்றித் துதிக்கப்படும் விநாயகப் பெருமானின் அருள் கூட்டும் விரதம் சதுர்த்தி விரதம். இடையூறுகளை அறவே அகற்றி நலன்களை அருள்கின்ற பெருமான் விநாயகன்! வடிவினாலும், தன்மையாலும், தலத்தினாலும் எளியவனாகவும் திகழ்கிறான் விநாயகன்! மனித வாழ்க்கையின் நன்மைகளை மட்டுமன்றி, பிரபஞ்சத்தின் இயக்கத்தையே நிர்ணயித்து, கண்காணிப்பவனும் விநாயகன்தான்!

நான்கு கரங்களோடு திகழும் தெய்வங்களுக்கு மாறாக, துதிக்கை என்று ஐந்தாம் கரத்துடன் திகழ்கிறார் கணபதி! பிரணவமான 'ஓம்' என்பதை பெருமானின் வலக் காதில் தொடங்கி துதிக்கையில் வந்து முடித்தால், பிரணவ வடிவமும் கணபதியும் வேறல்ல என்பது புலனாகும். அப்படி ஓம் என்று முகமண்டலம் அமைவதாலேயே "வலம்புரி விநாயகர்" மிக விசேஷமானவராகத் துதிக்கப்படுகிறார்.

அந்த உருவமே ஒரு தத்துவம்! முறம் போன்று அகன்று விரிந்த இரு காதுகள். கூர்ந்த பார்வை. இரண்டு கரங்களில் அங்குசம், பாசம், அடுத்த இரு கரங்களில் தந்தம் அக்ஷமாலை! துதிக்கையில் மோதகம். பெரும் வயிற்றைச் சுற்றிப் பிணித்துள்ள நாகம்! இப்படி விநாயக வடிவம் தென்படுகிறது.

"எல்லாவற்றையும் கேட்டு அறிந்துகொள்! கவனித்துப்பார்; அதிகம் பேசாதே" என்பது அதில் பிரதானமான அறிவுரை! மதங்கொண்டு ஓடும் உணர்ச்சிகளை அடக்கி, ஒரு நிலைப்படுத்தி, உயர்நிலைக்கு தயார் செய்கிறது அங்குசம்! தீமை பெருகும்போது அதை அழித்து, நல்லோரைக் காத்து, நன்மைகளை சிருஷ்டிக்கிறது பாசம்! "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று சொல்வது போன்று அமைந்துள்ளன தந்தமும், அக்ஷமாலையும்!

எண்ணிக்கையோடும் தொடர்புடையது அக்ஷமாலை. எழுத்தோடு தொடர்புடையது தந்தம். வியாசபாரதத்தை எழுதியதல்லவா? அதில் இன்னொரு சிறப்பும் இருக்கிறது. தன்னையே இழந்தாவது, ஒரு அருஞ்செயலை சாதிக்க முடியுமானால், அதை எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று தர்ம உபதேசமும் அதில் நிறைந்திருக்கிறது. எண்ணிக்கையால் ஒருமுகப்படும் எண்ணங்கள் உள்ளடங்கி ஒன்றானால், வாழ்க்கை மோதகம் போன்று இனிமையாக அமையும் என்று சொல்கிறது துதிக்கையிலுள்ள மோதகம்!

அந்த மோதகத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. மேற்புறம் வெண்மையாக மாவினால் மூடப்பட்டிருக்கும் அந்த மோதகத்தினுள் வைக்கப்படும் பூர்ணம் வெவ்வேறானது. சிலவற்றில் இனிப்பு, சிலவற்றில் உவர்ப்பு இப்படி, இதில் இனிப்பு மட்டுமே விநாயகனுக்கு ப்ரீதி! அதைத்தான் விநாயகன் தன் துதிக்கையில் தாங்கியிருக்கிறான். அதில் கூறப்படும் தத்துவம் என்ன?

பார்வைக்கு ஒரே மாதிரியாக மனிதர்கள் தென்பட்டாலும், அவர்கள் மனமும் அதன் எண்ணங்களும் வெவ்வேறானவை. ஆனால் எவருக்கும் சுவை தரக் கூடியவர்களாக, இனிமையானவர்களாக, தூய எண்ணங்களையும், தியாக உணர்வையும் அன்பையும் கருணையையும் நிரப்பிய இதயம் உடையவர்களாக யார் வாழ்கிறார்களோ அவர்களை நான் தாங்குகிறேன் என்பது தான் மோதகம் விவரிக்கும் தத்துவம்!

விநாயகனுக்குப் பெரும் வயிறு! விநாயகர் அகவலில் ஔவைப் பெருமாட்டி சொல்லுவாள்; 'பேழை வயிறும்' அந்தப் பெரும் வயிறுதான் இந்தப் பிரபஞ்சம்! முதற் பொருளான விநாயகர் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரையும் படைப்பித்து மூன்று தொழில்களையும் புரியுமாறு கூறியவுடன், அவர்களுக்கு என்ன செய்வது எப்படி செய்வது என்று புரியவில்லை. உடனே பெருமான், அவர்களை தம் துதிக்கையால் எடுத்து விழுங்கினார். அப்படி விழுங்கப்பட்ட அவர்கள் மிகுந்த வியப்புக்கு உள்ளா யினர் ஏன்?

இந்தப் பிரபஞ்ச வெளி அனைத்தையுமே அவருக்குள் கண்டு வியப்பும் மலைப்பும் ஏற்பட்டது. அவர்களுக்கு! சிருஷ்டியை எப்படித் தொடங்குவது, எப்படிக் காப்பது, எப் போது அழிப்பது என்று ஒவ்வொரு விஷயமும் அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. பரிபூரணமான இந்தப் பிரபஞ்ச வெளியும், விநாயகரும் வேறல்ல என்று உணர்ந்து, ஆனைமுகனைப் போற்றித் துதித்தனர். பெருமானும் அவர்களை மீண்டும் வெளியே கொணர்ந்து கடமை புரிய அனுமதித்தார்.

அப்படி பிரபஞ்சகரமான பெருமானின் பெரும் வயிற்றைச் சுற்றியிருக்கிறது. ஒரு நாகம்! நாகம் என்பது சக்தியின்வடிவம்? ஒரு சீரான தொடர் இயக்கம்! ஆற்ற லும், வேகமும், மிகுந்த நிலை! அந்தச் சக்தியே பிரபஞ்ச இயக்கத்தை நிலை நிறுத்து கிறது. இப்படிப்பட்ட பெருமானின் தலையில் ஒரு பிறைச்சந்திரன் அலங்கரிக்கிறது. அதன் மூலம், கலைகளின் பிறப்பிடம் அந்தப் பெருமானே என்ற தத்துவம் அறி வுறுத்தப்படுகிறது.

கல்வி, கலை, ஞானம், வெற்றி, செல்வம் அனைத்தையும் வழங்கும் நாயகன் விநாயகன்; வி – அற்ற; நாயகன் – தலைவன் அதாவது. நிகரற்ற தலைவன்; ஒப்பற்ற தலைவன் இணையற்ற தலைவன் என்பது பொருள்! அப்படிப்பட்ட தலைவனின் வாகனமாக மிகச்சிறிய வடிவில் உள்ள மூஞ்சூறு திகழ்கிறது. இதில் சொல்லப்படும் விஷயம் என்ன?

''உருவத்தைக் கண்டு இகழாதே!'' என்பதுதான் அதன் பொருள். ''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்'' என்று முதுமொழி கூறுகிறது அல்லவா? 'இப்படிச்சிறிய மூஞ்சூறு பேருரு படைத்துள்ள பெருமானைத் தாங்க முடியும் என்றொரு வினா எழும்புகிறதா? அது ஒன்றும் பெரிதல்ல. பரிபூரணமான பக்தியும், தியாகமும், அன்பும் நிரம்பியவர்களால் தங்கள் வலிமையைக் காட்டிலும் மேலான பெருஞ் செயல்களைச் சாதிக்க முடியும் என்பதற்கு விளக்கமாக அமைகிறது பெருமானின் வாகனம்!

இப்படித் தன் அம்சத்தின் ஒவ்வொரு பகுதியையும் உலக வாழ்வின் விளக்கமாக அமைத்துக் கொண்டுள்ள பெருமானின் இன்னொரு சிறப்பும் விசேஷமானது அனைவராலும் துதிக்கப்படுகின்ற உன்னத நிலையில் இருக்கின்ற பெருமான் வியா மகரிஷியின் வேண்டுகோளை ஏற்று மகாபாரதத்தை எழுதுகிறார். எவ்வளவு பெரிய உயர்நிலையை எட்டினாலும், தன்னிலும் எளியோரின் விருப்பத்தையும் ஏற்றுப் பணிபுரிவதே பெருந்தன்மை என்ற அற்புதமான ஞானபோதனை செய்கின்றார் பெருமான்.

அது மட்டுமல்ல; அப்படி எழுகின்ற வேளையில் எழுத்தாணி முறிந்துபோகிறது உடனே பெருமான் தன் தந்தத்தை முறித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு மீதத்தையும் எழுதி முடிக்கிறார். இதில் என்ன விசேஷம் இருக்கிறது? யானையின்

அழகும், மதிப்பும் தந்தம் என்பதே, இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழியின் அர்த்தம். அப்படிப்பட்ட தந்தத்தை முறித்து எழுதுகிறார் பெருமான்.

மிகச்சிறப்பான கடமை நிகழ்கின்றது என்றால், அதில் பணி செய்கின்ற பெரியோர்கள் தங்கள் விருப்பத்தை, செல்வத்தை, அழகை இழந்தாவது அந்தப்பணியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். தன்னைப் பற்றிய எண்ணத்தில் சிக்கி கடமையை நிறைவேற்றுவதில் எவ்வித தயக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாது; உலகின் மேன்மையும், நன்மையும், வளமும் மட்டுமே அவர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்துகிறார் விநாயகப் பெருமான்.

ஆர். எஸ். ராகவன்

நன்றி : கோபுர தரிசனம்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ஓம்

## ஆலயங்களில் கொடிமரம் ஏன்?

ஆலய அமைப்பில் கொடிமரம் என்பது 'சூட்சமலிங்கம்' என்று அழைக்கப் படுகிறது. அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும், கணங்களையும் தேவர்களையும் அழைத்தல் பொருட்டும், ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆலயத்திலும் கொடிமரம் நிறுத்தப்படுகிறது.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

கொடிமரத்தின் முன் துதிக்கும் பாடல்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West

ஓம்

இந்நூலை மஹாகணபதியின் அருளுடன் வெளியிட உதவிய இந்துதர்ம நூல்களின் ஆசிரியமணிகளுக்கு அடியேன் பணிவன்புடன் நன்றியுடன் வணக்கமும் கூறுகிறேன்.

வணக்கம்.

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.